## 2.2 அன்பின் பணிகளுக்காக எம் வாழ்வை வழங்குவோம்

ஆசிரியர் : நீங்கள் ஒவ்வொருவரும் படித்துமுடித்த பின் சமூகத்தில் யாரைப்போல வர எண்ணுகிறீர்கள்?

(மாணவர்கள் பல பதில்கள் கொடுக்கின்றனர். அதில் மேசி என்னும் மாணவி கூறுகின்றாள்)

மேசி : ரீச்சர்! நான் உங்களைப்போல் ரீச்சராக விரும்புகிறேன்.

ஆசிரியர் : எதற்காக இவ்வாறு ஆசைப்படுகின்றீர்?

மேசி : ரீச்சர் நீங்கள்,

- எங்களை மிகவும் அன்பு செய்கின்றீர்கள்.
- நன்றாகவே பாடம் சொல்லித் தருகின்றீர்கள்.
- ஒவ்வொருநாளும் நேரத்துடன் பாடசாலை வருகின்றீர்கள்.
- எங்கள் எல்லோரையும் பற்றி நன்கு அறிந்திருக்கிறீர்கள்.
- நன்றாகவே செபம் சொல்லுகிறீர்கள்.

எனவே, உங்களைப்போல வர ஆசையாய் இருக்கிறேன்.



- உலகில் நாம் பல நிலைகளில் அழைக்கப்படுகின்றோம். மேற்கூறிய படத்தில் காட்டியவாறு ஒவ்வொருவரும் எமக்கு உதவுபவர்கள். இவர்கள் உலகில் ஆற்றும் பணி பற்றி ஆசிரியர் மாணவருடன் கலந்துரையாடுவர்.

**ஆண்டவர் ஆபிராமை நோக்கி, உன் நாட்டிலிருந்தும் உன் இனத்தவரிடமிருந்தும் உன் தந்தை வீட்டிலிருந்தும் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு ஆசி வழங்குவேன். உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய்.**

**(தொ.நூ. 12:1-2)**

- **ஆபிராம் தமது அழைப்பிற்கு செவிமடுத்து எவ்வாறு செயற்பாட்டார்?**

* அனைத்தையும் விட்டு முன்னர் அறியாத நாட்டிற்குச் சென்றார்.
* இறைவன் கொடுத்த வாக்குறுதிகளை விசுவசித்தார்.

இறைவன் ஆபிராமுக்கு அளித்த வாக்குறுதி:

- ஒரு நாட்டை வாக்களித்தார்
- ஒரு சந்ததியை வாக்களித்தார்
- தமது ஆசீரை வாக்களித்தார்.

- **இவ்வாறு அழைக்கப்பட்ட ஆபிராமிடம் இறைவன் என்ன எதிர்பார்த்தார்?**

**ஒரே கடவுளை மட்டும் வழிபடும் ஒரு இனத்தை உருவாக்குதலை எதிர்பார்த்தார்.**



**எகிப்தில் என் மக்கள்படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன்; அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலையும் கேட்டேன்; ஆம், அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எனவே எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், அந்நாட்டிலிருந்து பாலும் தேனும் பொழியும் நல்ல பரந்ததோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன். இப்போது, இதோ! இஸ்ரயேல் மக்களின் அழுகுரல் என்னை எட்டியுள்ளது. மேலும் எகிப்தியர் அவர்களுக்கு இழைக்கும் கொடுமையையும் கண்டுள்ளேன். எனவே இப்போதே போ; இஸ்ரயேல் இனத்தவராகிய என் மக்களை எகிப்திலிருந்து நடத்திச் செல்வதற்காக நான் உன்னைப் பார்வோனிடம் அனுப்புகிறேன்.**

**(வி.ப. 3:7–10)**

- **இறைவன் மோசேயிடம் என்ன எதிர்பார்த்தார்?**

- எகிப்தில் துன்பப்படும் மக்கள் இனத்தை மீட்டு, விடுதலை வாழ்வை அளித்து, வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அவர்களை அழைத்துச்செல்ல மோசேயை இறைவன் அழைக்கின்றார்.

**பின்பு ஏலி சாமுவேலை நோக்கி, ‘‘சென்று படுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ, ‘ஆண்டவரே பேசும், உம் அடியான் கேட்கிறேன்’ என்று பதில் சொல்’’ என்றார். சாமுவேலும் தன் இடத்திற்குச் சென்று படுத்துக்கொண்டான்.**

**அப்போது ஆண்டவர் வந்து நின்று, ‘சாமுவேல், சாமுவேல்’ என்று முன்புபோல் அழைத்தார். அதற்கு சாமுவேல், ‘‘பேசும், உம் அடியான் கேட்கிறேன்’’ என்று மறுமொழி கூறினான்.**

**(1சாமு. 3:9–10)**

● வாசிக்கவும் 1 சாமுவேல் 3:1–10

## ஆண்டவரே பேசும் உம் அடியான் கேட்கின்றேன்

* சிறுவனாகிய சாமுவேலை இறைவன் தனது பணிக்காக அழைத்தார்.

இவ்வாறே, இறைவன் மாணவராகிய உங்களையும் வெவ்வேறு பணிகளுக்காக அழைக்கிறார்.

இவ் அழைப்பை உணர்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்கவேண்டும்.

● **பின்வரும் பாடலை இராகத்துடன் பாடுங்கள்:**

ஆண்டவரே பேசும்
உம் அடியவன் நான் கேட்கின்றேன் //

1. உள்ளம் மலரெனத் திறந்துள்ளது
உலகின் நினைவுகள் விடுத்துள்ளது
கள்ளமில்லா மனம் அமைந்துள்ளது
கடவுள் உம்மையே அழைக்கின்றது

2. ஒலிக்கும் குரல்களில் தூய்மையில்லை
ஒலித்தால் செவிகள் கேட்பதில்லை
உம் மொழி நான் கேட்பதிலே
உள்ளம் அடையும் ஆறுதலே

**எது எப்படியிருந்தாலும், ஒவ்வொருவரும் ஆண்டவர் அவரவருக்குப் பகிர்ந்தளித்த கொடையின்படியும் அவர் விடுத்த அழைப்பின்படியும் வாழட்டும்.**

**(1கொரி. 7:17)**

● **வாசிக்கவும்** 1 கொரி. 7:17–24

நாம் அனைவரும் எந்த நிலையில் இருந்தாலும் அந்த நிலையிலேயே கடவுளுக்குப் பிரமாணிக்கமாய் வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

நாம் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கு ஏற்ப இயன்ற வகையில் ஆண்டவருக்கு பணிபுரிய வேண்டும்.

இப்பணிகளைப் புரியும்போது ஆண்டவர் எம்மோடு இருந்து எமக்கு வலிமை தருகிறார்.

நாம் கிறிஸ்துவின் இரத்தத்தால் விலை கொடுத்து மீட்கப்பட்டிருக்கிறோம் என தூய பவுல் வெளிப்படுத்துகிறார்.

## செயற்பாடு:

● **பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக.**

(அன்புடன், இறைவன், நபர்களை, தேவைகளுக்காக, பணிக்காக)

1. நம் எல்லோரையும் கடவுள் விசேட ______________ அழைத்துள்ளார்.
2. எமக்குக் கிடைத்திருக்கும் ஒவ்வொரு அழைப்பின் மூலமும் ________, ________ எம்மை அர்ப்பணிக்க வேண்டும்.
3. ________ வெவ்வேறுபட்ட காலங்களில் பல்வேறு ________ விசேடமாக ______________ அழைத்தார்.

● **திருவிவிலியத்திலே பலவித அழைப்புப் பெற்றவர்களையும் அவர்களின் பணியையும் பட்டியலிடுக.**

| பெயர் | பணி |
|---|---|
| | |

**என் வாழ்க்கைக்கு...**

எனது வீட்டிலும் எனது பாடசாலையிலும் எனது சமூகத்திலும் எனக்கிருக்கும் கடமைகளையும் பொறுப்புக்களையும் நான் இறைவனுக்காக அர்ப்பணிப்புடன் செய்து முடிப்பேன்.